**<u>செய்தி வெளியீடு எண்.257</u>** **<u>நாள். 4.4.2008</u>**

**தமிழக அரசு நிறுவனமான அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷனுக்கு சென்னை மாநகரத்தில் கேபிள் தொலைக்காட்சி வசதிகளை ஏற்படுத்தி நடத்துவதற்கு மத்திய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறையின் அனுமதி 2.4.2008 அன்று வழங்கப்பட்டுள்ளதையொட்டி; அடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி விவாதித்து முடிவெடுக்க மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று தலைமைச்செயலகத்தில் கலந்தாலோசனைக் கூட்டம் நடத்தினார்.**

**இக்கூட்டத்தில் உள்துறைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், தகவல் தொழில்நுட்பத்துறைச் செயலாளர், அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஆகியோர் கலந்து கொண்டனர்.**

**மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும், சென்னை மாநகரத்திலும் கேபிள் தொலைக்காட்சியை அரசு நிறுவனமே நடத்துவதற்குத் தேவையான உபகரணங்களை வெளிப்படையான ஒளிவுமறைவற்ற டெண்டர் முறையைப் பின்பற்றி வாங்குவதற்கான ஏற்பாடுகளை அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும்;**

**2008, ஜூலை 15ஆம் நாள் முதல் நீலகிரி, கோவை, ஈரோடு, நாமக்கல், கரூர், சேலம், திண்டுக்கல், திருச்சி, புதுக்கோட்டை, பெரம்பலூர், அரியலூர், விழுப்புரம், தஞ்சை, திருவாரூர், நாகை ஆகிய மாவட்டங்களில் அரசு கேபிள் இணைப்பைப் பொதுமக்கள் தொலைக்காட்சிப் பயன்பாட்டுக்கு வழங்குவதென்றும்;**

**2008, ஆகஸ்டு 15ஆம் நாள் முதல் நெல்லை, கன்னியாகுமரி, மதுரை, தூத்துக்குடி, விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திருவண்ணாமலை, தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் அரசு கேபிள் இணைப்பைப் பொதுமக்கள் தொலைக்காட்சிப் பயன்பாட்டுக்கு வழங்குவதென்றும்;**

**2008, செப்டம்பர் 15ஆம் நாள் முதல் சென்னை மாநகரத்தில் அரசு கேபிள் இணைப்பைப் பொதுமக்கள் தொலைக்காட்சிப் பயன்பாட்டுக்கு வழங்குவதென்றும்;**

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

*****

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–**9.**